# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.368/2018

### அ.சா. 17 (LW 3 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பூபாலன் | **தொழில்** | |
| **த/க பெயர்** | சிவக்குமார் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **01.09.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் செய்யப்பட்டனர். மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை. 355ன் கீழான மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை எல்லீஸ் நகரில் குடியிருந்து வருகிறேன். மார்க்கெட்டில் தொழில் செய்கிறேன். நான் இளநிலை படிப்பு படித்துள்ளேன். இவ்வழக்கில் இறந்த மோகன்ராஜ் எனது நண்பர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 02.08.2018 அன்று எனது தாய்மாமா மகனின் கல்யாணத்திற்காக நான் நாகசூர்யா, கேசவமூர்த்தி , மோகன்ராஜ் ஆகியோர் பல்சர், டியோ ஆகிய 2 வண்டிகளில் கோயம்புத்தூர் சென்றோம். மறுநாள் 03.08.2018 அன்று மாலை 06.00மணிக்கு கோயம்புத்தூரிலிருந்து கிளம்பி மதுரைக்கு திரும்பி வந்தோம். திண்டுக்கல் தாண்டிய பிறகு இருந்த டோல்கேட்டில் ஒரு வண்டியை நானும், மோகன்ராஜ்ம் எங்கள் வண்டியில் விரட்டி சென்றோம். அதன்பிறகு பொட்டி செட்டிபட்டி பிரிவில் வண்டிகளை நிறுத்தி விட்டு சிறுநீர் கழித்தோம். அந்த இடத்திற்கு அடையாளம் தெரியாத 4 பேர்கள் வந்தார்கள். மோகன்ராஜ் கல்லை எடுத்து வந்த 4 பேரில் ஒருவரை அடித்தார். அதன்பிறகு மோகன்ராஜை அவர்கள் கத்தியால் குத்தி விட்டார்கள். அந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். மோகன்ராஜ் கீழே விழுந்து கிடந்தான். ஆம்புலன்சுக்கு போன் செய்தேன். மோகன்ராஜ் அப்பாவிற்கு போன் செய்தோம். அந்த இடத்திற்கு போலிசார் வந்தார்கள். மோகன்ராஜ் ஆம்புலன்சில் கூட்டி சென்றார்கள். எங்கள் மூவரையும் அம்மையநாயக்கனூர் காவல் நிலையம் கூட்டி சென்றார்கள். அந்த 4 பேர்கள் அங்கிருந்து போய் விட்டார்கள். அந்த 4 பேர் வந்த வண்டி என்ன வண்டி என்று ஞாபகம் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தார். எங்களை ஆய்வாளர் பல்வேறு இடங்களுக்கு சென்று பல்வேறு போட்டோக்களை காண்பித்து அடையாளம் காட்ட சொன்னார். மதுரை சிறைச்சாலைக்கு சென்று அங்கிருந்த நபர்களை பார்த்து எதிரிகளை பார்த்து எதிரிகளை அடையாளம் காட்டினோம். நான் சென்ற போது என்னுடன் நாகசூர்யா, கேசவமூர்த்தி, ஆகியோர்கள் இருந்தோம். அவர்களும் அடையாளம் காட்டினார்கள்.

ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் அன்று சிறைச்சாலையில் அடையாளம் காட்டிய யாரும் நீதிமன்றத்தில் இல்லை.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

03.08.2018 அன்று திண்டுக்கல் டோல்கேட் அருகில் நானும் மோகன்ராஜும் எங்கள் வண்டியும் ஒரு வண்டியை விரட்டிச் சென்றோம் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். மோகன்ராஜ் ஒருவரை கல்லால் அடித்தார், அந்த கல் சம்பவ இடத்தில்தான் இருந்தது என்றால் சரிதான். டோல்கேட்டில் இருந்து பொட்டிசெட்டிபட்டி வரை நிறைய கடைகள் இருக்கிறது என்றாலும் பொட்டிசெட்டியை தாண்டியவுடன் 100 மீட்டர் தூரத்தில் போலிஸ் செக்போஸ்ட் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மோகன்ராஜ் அடிபட்டவுடன் அவரை நான் தூக்கி பார்த்தேன் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மோகன்ராஜை நான் தூக்கி பார்த்தேன். ஆனால் அந்த இரத்தக்கரை என் சட்டையில் படவில்லை. நான் ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லும் முன்பு அந்த வழியில் வந்த நபர்களிடம் உதவி கேட்டேனா என்றால் 3,4 நபர்களிடம் கேட்டேன். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மோகன்ராஜை ஆம்புலன்சில்தூக்கிச் சென்ற பின் எங்களை காவல் நிலையம் கூட்டிப் போய் எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

நாங்கள் இயற்கை உபாதை கழிப்பதற்கு காவல்நிலையத்தில் இருந்து வெளியே வந்தவுடன் இடது பக்கமாக உள்ள கழிப்பறையை உபயோகித்தோம் என்றால் சரிதான். நாங்கள் வெளியே வரும்போது ஆம்புலன்ஸ் காவல் நிலையத்திற்கு எதிரே நிற்கவில்லை என்றால் சரிதான். எங்களை போலிசார் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் எழுதிக் கொண்டார்கள், அதில் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு மோகன்ராஜின் அப்பா அடுத்த நாள் விடியற்காலை சுமார் 06.00 மணிக்கு வந்து என்ன நடந்தது என்று எங்களிடம் விசாரித்தார். பிறகு தான் அவர் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். எங்களை 3 நாள் சந்தேகத்தின் அடிப்படையில் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். மேலும் எங்கள் மூவரையும் தவிர மேலும் 4,5 நபர்களை காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து சந்தேகத்தின் பேரில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் இந்த வழக்கிற்காக 90 நாட்கள் போலிசாருடன் விசாரணைக்காக பயணித்தோம் என்றால் சரிதான்.

போலிசார் கலெக்டர் அலுவலகத்திலும், பல காவல் நிலையங்களிலும் போட்டோக்களை காட்டி விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் பார்த்ததாக சொல்லும் நபர்களின் அடையாளமான உருவ அமைப்பான நெட்டை, குட்டை , சிவப்பு, கருப்பு, மாநிறம், குண்டா, ஒல்லியா என்ற விவரங்களை கேட்டார்கள். நான் போலிசார் விசாரணையில் சொன்னேன். என்னையும் மற்ற எனது 2 நண்பர்களையும் காவல்நிலையம் வரச் சொல்லி எதிரிகள் 4 பேரின் புகைப்படங்களையும் காட்டி சிறைச்சாலையில் நடத்தும் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டும்படி போலிசார் சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் பேரில்தான் நான் அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான்.

போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 10 முறைக்கு மேல் விசாரித்தார்கள். ஒவ்வொரு முறையும் நான் சொல்வதை எழுதிக் கொண்டார்கள். மோகன்ராஜிடம் எதுக்குடா இங்கு நிக்கிற என்று சொல்லி மிரட்டி பணம் பறிக்கும் நோக்குடன் அவனது சட்டை பையை பிடிக்கவும் தகராறு ஏற்பட்டது என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதில் ஒருவன் நாங்கள் சென்ற TN 59 Honda dio என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை எடுத்துச் செல்ல முய்பட்ட போது மற்றொருவன் வண்டியை எடுத்துக் கொண்டு போனால் மாட்டிக் கொள்வோம் , வண்டியை விட்டுட்டு வாடா என்று சொல்லவும் எங்கள் வண்டியை எடுத்துச் செல்லாமல் அவர்கள் வந்த வண்டியில் ஏறி மதுரை நோக்கி சென்று விட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.01 20:55:15 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.